[1981 ஏப்ரல் 15

இப்போது சந்தேகத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. சந்தேகம் ஊர்ஜிதமானால் அந்த சொசைட்டியை சூப்பர்சீட் பண்ணலாம் ; அலுவலர்களை பணி நீக்கம் செய்யலாம். இப்போது அவர்கள் 'சோ காஸ் நோட்டீசுக்கு' தந்திருக்கிற பதில் விவசாயிகளுக்கு உரத்தின் விலை ஏறும் என்று தெரிந்து விட்டதால் ஒரே நாளில் திடீரென்று எல்லா விவசாயிகளும் வந்து உரத்தை வாங்கி விட்டார்கள் என்று. ஆகவே, இதில் விவசாயிகளையும் விசாரிக்க வேண்டியிருக்கிறது.

செங்கற்பட்டு கூட்டுறவு நகர வங்கி

*வினா எண் 694.— திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) செங்கற்பட்டு கூட்டுறவு அர்பன் வங்கி எண் 375 நிர்வாகம் பற்றி புகார் ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) அவை பற்றி என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) திரு. எ. ருக்மாங்கதன் என்பவரிடமிருந்து புகார் மனுக்கள் பெறப்பட்டன. அவற்றின் மீது உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைத் தலைவ ரவர்களே, திரு. ருக்மாங்கதன் அவர்கள் அனுப்பிய புகார் கிடைத்தது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். புகார் அனுப்பி நீண்ட நாள், ஏறத்தாழ 6 மாதங்களுக்கு மேல் ஆகி விட்ட காரணத்தால் அதில் சம்பந்தப்பட்ட எவர் மீதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவ ரவர்களே, அவர்கள் கொடுத்திருக்கிற 5 புகார்கள் மீது விசாரிக் கப்பட்டு, சிலவற்றில் குற்றம் இல்லை என்றும் சிலவற்றில் குற்றம் ஊர்ஜிதம் ஆகியிருக்கிறது என்றும் தெரிந்த காரணத் தால், அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கிறது. யார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று பெயர் தரப்படவில்லை. மற்றபடி தவறு செய்தவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தீவிரமான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கிறது.

புகளூர் நதி நீரேற்றுப் பாசன கூட்டுறவுச் சங்கம்.

*வினா எண் 695 — திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டம் புகளூர் நதி நீரேற்றுப் பாசன கூட்டுறவு சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?

(ஆ) அதன் மூலம் எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன ?

(இ) அச்சங்கத்திற்குக் கட்டுப்பட்ட ஓரத்தை தளவாய் பாளையம், கோவிந்தம்பாளையம் திட்டப் பகுதிகள் பாசனம் பெறாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஈ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) திருச்சி மாவட்டம் புகளூர் நதி நீரேற்றுப் பாசனக் கூட்டுறவு சங்கம் 1968 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) இச்சங்கத்தின் மூலம் சுமார் 2,214 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. ஆனால் சுமார் 1,101 ஏக்கர் நிலங்களுக்கு மட்டுமே தற்போது பாசன வசதி பெறும் வழி வகைகள் வகுக்கப்பட்டுள்ளன.

(இ) மற்றும் (ஈ) ஓரத்தை, தளவாய்பாளையம், கோவிந்தம் பாளையம் திட்டப் பகுதிகளுக்கான நிலத்தில் பாசனம் நடைபெற சில நடை முறை இடைஞ்சல்கள் உள்ளன. இத் திட்டப் பகுதிகளுக்கான விசையேற்றங்கள் மூலத்திட்டமான ''தெளிப்பான் முறைப் பாசனத்திற்'' கேற்ப புகளூர் கால்வாயில் அமைக்கப்பட்டன. உறுப்பினர்களின் எதிர்ப்பின் காரணமாக தெளிப்பான் முறைப்பாசனம் கைவிடப்பட்டு சாதாரண பாசனம் அளிக்க வேண்டியிருப்பதால் புகளூர் கால்வாயிலிருந்து நீர் இறைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டு அதற்குப்